பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

STAFF COPY
NOT FOR SALE

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத வூ ஆவணி ௴ 31 உ ஞாயிற்றுக்கிழமை (16 09 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 26 கதிர்: 196

# ஸ்ரீலங்கா ஹெலிகள் சூட்டில் 3 இந்திய மீனவர்கள் மரணம்!

## 17 பேர் படுகாயமுற்றனர்

சென்னை, செப்டெம்பர் 16

இந்திய மீனவர்களின் படகுகள் மீது ஸ்ரீலங்கா கடற்படையைச் சேர்ந்த ஹெலிக்கொப்டர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். 17 பேர் படுகாய முற்றனர்.

இராமேஸ்வரம் அருகே இரணைதீவுக் கடலில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

சுமார் நூறு படகுகளில் சென்ற இந்திய மீனவர்கள் அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர் என்றும்-

இலங்கைக் கடற்படையினர் அப்படகுகளை வழிமறித்துத் தாக்கியதுடன் பத்துப் படகுகளை பிடிக்கப்பட்ட மீன்களுடன் கைப்பற்றிக் கொண்டு சென்றனர் என்றும் -

இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர்கள் பின்னர் எஞ்சியபடகு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ் ஆஸ்பத்திரியின் மருந்துக் களஞ்சியம் சேதம்

### விமானக்குண்டு வீச்சால் அனர்த்தம்

யாழ்ப்பாணம், செப். 16

தற்போது மூடப்பட்டு உள்ள யாழ். போதனா வைத்தியசாலை மருந்துக் களஞ்சியம் உட்பட பல வார்ட்டுக்களும், அவசர சிகிச்சை பிரிவு சமையலறை ஆகியன, வும் விமானக்குண்டு வீச்சால் பலத்த சேதமடைந்துள்ளன.

''சகடை'' விமானத்தின் இரு குண்டுகளும் அவ்ரோ விமானத்தின் பீப்பாய்க் குண்டு ஒன்றும் வைத்திய சாலைப் பகுதியில் விழுந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வீச்சினால் பிரதான மருந்துக் களஞ்சியம் சமையலறை ஆகியன தரைமட்டமாகியுள்ளன. அங்கிருந்த ஏராளமான மருந்து வகைகள் நாசமாகியுள்ளன.

போத்தல்கள் உடைந்து ஒரே கண்ணாடித் துண்டுகள் நிறைந்து காணப்படுகின்றது.

சமையலறைப் பாத்திரங்களும் சேதமடைந்துள்ளன.

பெண்கள் கண் சிகிச்சை பெறும் வார்ட்டுக்கள், அவசர சிகிச்சைப் பிரிவு உட்பட வைத்தியசாலையின் பல்வேறு

[3 ஆம் பக்கம் பார்க்க]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், செப்.16

நேற்று முன்தினம் யாழ். கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஸ்ரீராம் (எஸ். நந்தகுமார்-திருகோணமலை) வீரமரணமடைந்தார். (உ)

## ஆலயங்களில் மணி ஒலிக்க திலீபனுக்கு அஞ்சலி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 16

தியாகி திலீபனின் மூன்றாவது ஆண்டு நிறைவைநினைவு கூருமுகமாக நேற்றுக்காலை 10 மணிக்கு ஆலயங்கள் தோறும் மணிஓசை ஒலித்தது. மக்கள் கூடி நின்று மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

வீதிகளில் பல இடங்களில் அவரின் முழு அளவிலான படங்கள் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது

சந்திகளில் ஒலிபெருக்கிகள் மூலம் புரட்சிப் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன.

(இ-3-6-7)

## முத்திரைச் சந்தியில் நேற்று 2 பேருக்கு மரணதண்டனை

விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி பண மோசடி மற்றும் ஊழல்கள் புரிந்த இருவருக்கு நேற்று மாலை 5 மணிக்கு நல்லூர் முத்திரைச்சந்திப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளினால் பகிரங்க மரணதண்டனை வழங்கப்பட்டது.

குருமாஸ்டர்என்று அழைக்கப்படு பிறவுண் வீதியைச் சேர்ந்த ஆசிரியர் சண்முகநாதன் நடராசா (வயது 54), புத்தூரைச் சேர்ந்த வசந்தலோசனாதேவி (வயது 34) ஆகிய இருவருக்குமே மரண தண்டனை வழங்கப்பட்டது.

(உ-5)

## மரண தண்டனை குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 16

முத்திரைச்சந்தியில் நேற்று இரண்டு பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய செயற்குழு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அறிக்கையின் ஒருபகுதி வருமாறு:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியைக் குறித்து நிற்கின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியானது தலைவர் பிரபாகரனின் கட்டுக்கோப்பான, தீர்க்க தரிசனம் மிகுந்த வழிநடத்தலையே அடித்தளமாகக் கொண்டிருக்கின்றது.

இந்தக் கட்டுக்கோப்பு என்பது இடையில் வந்து [illegible]

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பொம்மரின் சிதைந்த பகுதிகள் நேற்று பொதுமக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், செப். 16

கடந்த வியாழக்கிழமை மண்டைதீவுக் கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் விழுந்து நொருங்கிய 'பொம்மர்' விமானத்தின் சில சிதைந்த பகுதிகள் நேற்று மக்கள் பார்வைக்காக யாழ் முத்திரைச்சந்தியில் வைக்கப்பட்டிருந்தன.

ஏராளமான மக்கள் கூடி நின்று அவற்றைப் பார்வையிட்டனர்.

விமானத்தின் கீழ்பகுதி. தொடர்பு சாதனம், விமானியின் இருக்கை, இயந்திர பகுதிகள் ஆகியன பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன, இராணுவ சீருடையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

பொம்மரின் சிதைந்த பகுதிகள் விடுதலைப் புலிகளினால் முத்திரைச் சந்திக்குகொண்டு வரப்பட்டபோது ஹெலியில் இருந்து வேட்டுக்கள் முத்திரைச் சந்தைப் பகுதியில் தீர்க்கப்பட்டன. (இ-3)

## பலாலியில் இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.16

பலாலி இராணுவ முகாம் சுற்றாடலிலுள்ள இராணுவ காவல் அரண்கள் மீது நேற்று விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதல்களை நடத்தினர்.

மயிலிட்டி, காங்கேசன் துறை பக்கமாக உள்ள நிலைகளில் காவலிலிருந்த சிப்பாய்கள் மீதே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவங்களில் இரு நிலைகளில் காவலில் நின்ற சிப்பாய்கள் இருவர் உயிரிழந்தனர். (ஒ)

## தலைமன்னாரில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 16

தலைமன்னார் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பெரும் மோதலில் மற்றொரு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரமரணமடைந்தார்.

[illegible] (உ)

## நகரில் நேற்றும் தொடர்ந்த விமானத் தாக்குதல்கள்

யாழ். நகரப் பகுதியில் மூன்றாவது நாளாக நேற்றும் இராட்சத சீனச் சகடை, மற்றும் அவ்ரோ விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்று அதிகாலையிலேயே நகரப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சுக்கள் ஆரம்பமாகின.

அதைத்தொடர்ந்து காலை 8.30 மணியளவில் 'சகடை' நகருக்குள் பிரவேசித்தது. அது தனது வழமையான அட்டகாசத்தை தொடங்கியது.

அதன் பின்னர் நாள் முழுவதும் சகடையும, அவ்ரோவும் விட்டு, விட்டு வந்து நகரை அதிர வைத்தன

யாழ். முஸ்லிம் பகுதி. ரயில் நிலையப் பகுதி உட்பட நகரின் பல இடங்களில் குண்டுகள் சேதங்களை ஏற்படுத்தின.

ஷெல் வீச்சுகளினால் கரையோரப் பகுதிகளிலும் நகரப் பகுதியிலும் உள்ள பெருமளவிலான கட்டடங்கள், வீடுகள் சேதமடைந்தன.

[ஒ-7-3-6]

## யாழ். கோட்டைப் பகுதியில் பல ஆயுதங்கள் மீட்பு

யாழ்கோட்டைப் பகுதியில் கடந்தவியாழன் இடம்பெற்ற மோதல்களின் போது படையினர் இழந்த ஆயுதங்கள், கருவிகள் மேலும் சில நேற்று விடுதலைப்புலிகளினால் மீட்கப்பட்டிருக்கின்றன.

ரி 56 ரக துப்பாக்கி-1 அதற்கான ரவைக் கூடுகள் - 4, ரவைகள் - 435, குண்டு துளைக்காத ஜக்கெட் - 1, ஹிற்பாக் - 1, மிலிட்டரி பெல்ட் - 2, ஏ.கே. ஹோல்சர் 1, தண்ணீர்ப் போத்தல்- 4 ஆகியனவே மீட்கப்பட்டன. (உ)

## சிலாவத்தையில் 10 பேர் பொம்மர் தாக்கி மரணம்

யாழ்ப்பாணம், செப். 16

முல்லைத்தீவு, சிலாவத்தைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பொம்மர்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தக் குண்டு வீச்சுக்களுக்கு இலக்காகி, அப்பகுதியில் பொதுமக்கள் பத்துப் பேர் உயிரிழந்தனர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

உயிரிழந்தவர்களின் பெயர், விவரங்கள் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**இடமாற்றம்**

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2. பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

**கோழித்தீன்**

கோழித்தீன் வகைகள் கலந்தும், கோழித்தீன் மூலாதாரப் பொருட்கள் அரைத்தும் கொடுக்கப்படும். சிவா மில்ஸ் அன் இன்டஸ்றீஸ், 4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [14187]

## இன்னும் 85 ஆயிரம் இலங்கையர்

கொழும்பு, செப். 16

குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் இன்னமும் 85 ஆயிரம் இலங்கையர் சிக்குண்டு இருப்பதாக கொழும்பில் வெளியுறவு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**புவனம் தங்கவேல்**

(ஓய்வு பெற்ற யாழ். மத்திய கல்லூரி ஆசிரியை)

பிறப்பு: 14 — 02 — 1929

இறப்பு: 26 — 09 — 1989

திதி: 16 — 09 — 1990

எங்கள் அன்புத்தாயே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றதம்மா இன்னமும் எங்கள் துயர் ஓயவில்லையே அன்புடனும், பண்புடனும், அறிவுடனும் இல்லறம் நடத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
சகோதரிகள்,
உற்றார்,
உறவினர்கள்,

ப. தங்கவேல்,
இல 23,
2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
[14191]

# இடம் பெயர்ந்த குடும்பங்கள் உதவி எதுவுமின்றி தவிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். நகரில் இடம் பெற்ற மிக மோசமான ஷெல், பீரங்கித்தாக்குதல்கள் காரணமாக இடம் பெயர்ந்த, யாழ். பிரதான வீதிப் பகுதியை அண்டிய சுமார் 20 குடும்பங்கள் உதவிகள் ஏதுமின்றி திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் தங்கியுள்ளன. (இ 5-6)

# பிரசவத் தாய்மார் அவதி

நவாலி, செப். 16

மானிப்பாய் செல்லமுத்து வீதியில் உள்ள மானிப்பாய் அரச மருத்துவ நிலையத்தில் முன்னர் வைத்திய அதிகாரி உட்பட 8 ஊழியர்கள் பணி புரிந்தனர், தற்போது மூன்று ஊழியர்கள் மட்டுமே பணி புரிவதால் நோயாளர்கள் — குறிப்பாக பிரசவத்துக்காக வரும் தாய்மார்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

காலை 8 மணி முதல் 11 மணிவரையுமே இந்த மருத்துவ நிலையம் இயங்குவதால் பிரசவத் தாய்மார் வேறு மருத்துவ நிலையங்களை நாட வேண்டிய நிலைமை உருவாகி உள்ளது. (இ-100)

## அறிவித்தல்

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் கடமை புரிய விரும்பும் இளைப்பாறிய ஆர். எம். பி. வைத்தியரொருவரோ அன்றேல் எம். பி. பி. எஸ். இறுதிப் பரீட்சை சித்தியெய்திய ஒருவரோ உடனடியாக தேவைப்படுகின்றார். கிளிநொச்சி அரசாங்க அதிபருடன் உடன் தொடர்பு கொள்ளவும். இதற்காக அவருக்கு நியாயமான வேதனம் வழங்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

[சி-5201]

## அறிவித்தல்

**பயிர்ச்செய்கை – பெரும்போகம் – 1990 / 91**

**பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் – கிளிநொச்சி மாவட்டம்**

1951 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டத்தாலும் 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 32 ஆம் நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1990 / 91 ஆம் ஆண்டுக்கான பெரும் போக பயிர்ச் செய்கை பற்றிய தீர்மானங்கள் கீழே தரப்படுகிறது.

அவசரகால சட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க இவ்வறிவுறுத்தல்கள் அமையுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. திட்டத்தின் பெயர்கள்: இரணைமடு, அக்கராயன், புதுமுறிப்பு, கல்மடு, வன்னேரி, கரியாலை நாகபடுவான் குளங்கள்.
2. விதைக்கும் விஸ்தீரணம்: எல்லா நீர்ப்பாசன காணிகளும்
3. விதைக்கும் நெல் இனம்: 3-3½ மாதம் 4 — 4½ மாதம்
4. ஆரம்ப விதைப்பு திகதி: 01 – 10 – 1990
5. கடைசி விதைப்பு திகதி: 31 – 10 – 1990
6. ஆரம்ப நீர் விநியோகம்: 01 – 11 – 1990
7. கடைசி நீர் விநியோகம்: 15 – 02 – 1991
8. வாய்க்கால் துப்பரவு செய்தல்: 01 – 10 – 1990
9. வேலி அடைத்தல்: 01 – 10 – 1990
10. கால் நடைகளைக்- கட்டுப்படுத்தல்: 01 – 10 – 1990இல் இருந்து 01 – 03 – 1991 வரை
11. அறுவடை செய்தல்: 01 – 03 – 1991

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

திகதி: 11-09-90 [சி-5202]

# மரண அறிவித்தல்

திருமதி

**வடிவாம்பிகை பஞ்சாட்சரவேல்**

திருமதி வடிவாம்பிகை பஞ்சாட்சரவேல் 13 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பஞ்சாட்சரவேலின் மனைவியும், புலேந்திரன் (கனடா), மோகன் (Holiday Inn) ஆகியோரின் தாயாரும், திலகராணி, சுவர்ணாவின் மாமியாரும், நிரஞ்சன், திலீப் ஆகியோரின் பேத்தியாரும், காலஞ்சென்ற சிவநாதனின் சகோதரியும் சுப்புலஷ்மியின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு 14ஆம் திகதி மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. ஜெயரஞ்சிதன்.

21, ரத்தினகாராபிளேஸ்,
தெகிவளை. [சி-5200]

# வைத்திய வசதிகள் இன்றி அகதிப் பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப். 16

திருகோணமலையில் இருந்து அகதியாக வந்த 17 வயதுப் பெண் போதிய வைத்திய வசதி இன்றி மரணமானார்.

திருகோணமலையில் இருந்து அகதியாக வந்து புதுக்குடியிருப்பு முகாமில் தங்கியிருந்தார்.

நோய் காரணமாக அப்பெண் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சத்திர சிகிச்சை அளிக்க போதிய வசதிகள் அங்கு இல்லாததால் அந்தப் பெண் மரணமடைய நேரிட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3-6]

## அறிவித்தல்

உதயன் பத்திரிகையில் மரண அறிவித்தலைப் பிரசுரிக்கக் கொண்டு வருபவர்கள் தமது அடையாள அட்டையை அல்லது தமது பகுதி உதவி அரச அதிபர், கிராம சேவையாளர், உதயன் பத்திரிகை முகவர் உதயன் செய்தியாளர் ஆகியோரில் ஒருவரிடமிருந்தோ அல்லது தமது பகுதி முக்கிய பிரமுகர் ஒருவரிடமிருந்தோ அத்தாட்சிக் கடிதத்தைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
உதயன்.

## பத்திரிகை விநியோகஸ்தர்களுக்கு ஓர் அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விற்பனை செய்ய விரும்புவோர் நேரடியாக உதயன் பணிமனையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
உதயன்.

# இசை நிகழ்ச்சி ரத்து

இன்று ஞாயிற்றுக்கிழமை (16-09-90) புலோலி சினிமா திரையரங்கில் நடைபெற இருந்த **'போர்க்கால ராகங்கள்'** என்னும் இசை நிகழ்ச்சி நாட்டின் சூழ்நிலை காரணமாக பின்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத் தலைவர் அ. அமிர்தராஜ் தெரிவிக்கிறார்.

17, யமுனா வீதி,
நல்லூர்

எஸ். அருணாசலம் (13860)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16 - 11 - 1914

மறைவு: 16 - 08 - 1990

அமரர் திரு.

**பொன்னம்பலம் சண்முகநாதன்**

(ஓய்வுபெற்ற ஆடிற்றர், இறைவரித்திணைக்களம்)

எம் உயிரிற்கும் மேலான அன்புத் தந்தையே!
நாட்கள் முப்பத்தியொன்று உருண்டோடிவிட்டன
முப்பத்தியொரு வருடங்கள் சென்றாலும் உங்களின்
பிரிவெனும் துயர்தனிலிருந்து எங்களால் விடுபட
முடியாமல் தவிக்கின்றோம்.
எம்மருமைத் தந்தையே! தங்களின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

16 - 09 - 1990 (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டு கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

15, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். (14207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் நினைவாக எழுச்சி நிகழ்ச்சிகள்

தியாகி திலீபனின் 3 ஆம் ஆண்டு நினைவையொட்டி நேற்று முதல் 26 ஆம் திகதி வரை எழுச்சி தினமாகக் கொண்டாட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மேற்கொண்டுள்ள ஒழுங்குகள் வருமாறு:-

★ திலீபன் தியாக மரணமடைந்த எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.42 க்கு ஆலய மணிகள் ஒலிப்பதுடன் மக்கள் தமது கடமைகளை நிறுத்தி மௌன அஞ்சலி அனுஷ்டிக்க வேண்டும். மீண்டும் இரண்டு நிமிடங்களுக்குப் பின் மணிகள் ஒலிக்க மௌன அஞ்சலி நிறைவு பெறும்.

★ நினைவு நாட்களில் சகல வீட்டு வாசல்களிலும் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்ட பந்தல்கள் அமைக்கப்பட்டு, தினமும் மலர் சாத்தி அஞ்சலி செய்ய வேண்டும்.

★ தினமும் பொது இடங்களில் திலீபனின் ஞாபகார்த்தப் பாடல்கள், பேச்சுக்கள் ஒலிபரப்பவேண்டும்.

★ வட்ட அவை ரீதியாக திலீபனின் உருவப்படம் தாங்கிய தேர்கள் கிராமம், கிராமமாகப் பவனி வரும். பொதுக் கூட்டங்களும் கிராமம் கிராமமாக நடைபெறும்.

★ திலீபனின் போராட்டம் சமகால நிகழ்வுகள் ஆகியவற்றை விளக்கும் திரைப்படங்கள் கிராமம் தோறும் காண்பிக்கப்படும்.

★ மாணவர் அமைப்பு திலீபனின் போராட்ட வரலாறு சம்பந்தமாக மாணவர்களிடையே போட்டிகளை நடத்தும்.

★ இறுதிநாளன்று திலீபன் ஞாபகார்த்தமாக இரத்த தானம் நடைபெறும்.

★ 25 ஆம் திகதி வலிகாமம் தென்மராட்சி, வடமராட்சி ரீதியாக அடையாள உண்ணா விரதம் நடைபெறும். அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெறும்.



★ திலீபனின் சொந்த ஊரான ஊரெழுவில் திலீபன் ஞாபகார்த்த நினைவுச் சின்னத் திறப்பு விழா 25 ஆம் திகதி இடம்பெறும்.

★ தினமும் இரவு 7 மணி முதல் ஒன்பது மணி வரை திலீபன் ஞாபகார்த்தமாக முக்கிய தலைவர்களின் உரைகள் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பப்படும். (இ-3)

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பொதுநல அமைப்பு மத்தியஸ்தம்

## பிரேமாவுக்கு ஆஸிப் பிரதமர் யோசனை

மெல்போர்ன், செப். 16

இலங்கை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர காமன் வெல்த் அமைப்பு [பொது நல அமைப்பு] நாடுகள் மத்தியஸ்தம் செய்யும் யோசனையை ஆஸ்திரேலிய அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் ஆஸ்திரேலிய பிரதமர் பொப்ஹோக்இந்தயோசனையின் விவரங்களை கூறியிருக்கிறார்.

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவரவும்-

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்குமான பேச்சுக்களை நடத்துவதற்கும் -

காமன் வெல்த் அமைப்பு மத்தியஸ்தம் செய்யும் யோசனையை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படி பிரதமர் ஹோக், திரு. பிரேமதாஸாவைக் கடிதம் மூலம் கோரியிருக்கிறார்.

ஐ.நா. அமைப்பு மத்தியஸ்தம் செய்யும் பாணியில் காமன் வெல்த் மத்தியஸ்தம் அமையும் என்றுதிரு. ஹோக் தனது கடிதத்தில் கூறியிருக்கிறார்.

இலங்கை வடக்கு-கிழக்கு நிலைமை குறித்து ஆஸ்திரேலிய செனட்டர் ரொபர்ட் ஹில் எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்து, ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் காரி ஈவான்ஸ் (Carry Evans) அண்மையில் கொழும்பு சென்றிருந்த சமயம் ஜனாதிபதியுடன் பேச்சுக்கள் நடத்தியது தெரிந்ததே —

அதன் பெறுபேறாகவே ஆஸ்திரேலிய பிரதமர் பொப் ஹோக்கின் கடிதம்ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# சுன்னாகம் மின் நிலையம் சேதமடைந்தது எப்படி?

## அரசு வெளியிடும் 'புது' விளக்கம்

சுன்னாகம் மின் நிலையம் சேதமடைந்தது எப்படி? — இதற்கு அரச தரப்பில் புதிய விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றின் போதே இந்தப் புதிய விளக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் பங்கு பற்றிய செய்தியாளர் ஒருவர் 'சுன்னாகம் மின் நிலையம் விமானத் தாக்குதலுக்கு இலக்கானது என்று கூறுவது சரியானதா?'' எனக் கேள்வி எழுப்பினார்.

அப்போது அமைச்சர் ரஞ்சனுடன் கூட இருந்த பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இடையில் குறுக்கிட்டு—

''இல்லை. மின் நிலையத்துக்கு வெளியில் இருந்த பெற்றோல் பவுஸர் ஒன்றே தாக்கப்பட்டது. அதனாலேயே தீப்பிடித்தது'' — என்று பதில் கூறினார். (உ)

## மரண தண்டனை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல; எமது இயக்கத்தின் 18 வருட கால ஆயுதப் போராட்ட வரலாற்றுடன் சேர்ந்தே வருகிறது.

நாம் கட்டியமைக்கப் பாடுபடும் தமிழீழமானது, எமது சமூகத்திலுள்ள பிற்போக்குத்தனமான அம்சங்களை அகற்றி, எமது சமூகத்தைத் தூய்மைப்படுத்தும் உயரிய நோக்கத்தையும் கொண்டிருக்கின்றது.

இவ்உயரியநோக்கத்தை முதலில் எமது இயக்கத்திற்குள் செயற்படுத்தி, பின்னர் அது படிப்படியாக மக்களிடம் சென்று அவர்களையும் பற்றிப் பிடிக்கும் வழிமுறையைத் தான் நாம் தேர்தெடுத்துக் கடைப்பிடிக்கின்றோம். அதாவது ஒரு நேர்மையான சமூகத்தின் முன்னோடிகளாக எமது இயக்கத்தின் உறுப்பினர்கள் இயங்க வேண்டும். ஊழல், மோசடிபோன்ற சமுதாய விரோதச் செயல்களில் ஈடுபடும் எமது உறுப்பினர்கள்- அவர் ள் இயக்கத்தின் உயர் பொறுப்பிலுள்ளவரானாலும் சரி, சாதாரண போராளியாக இருந்தாலும் சரி ஒரேவிதமாகவே கருதப்பட்டு ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். கடந்த காலங்களிலும் இவ்விதமாகவே எமது நடைமுறை இருந்துவந்துள்ளது. சில குற்றச்செயல்களுக்கு மரண தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இன்று எமது விடுதலை அமைப்பு பெருமளவில் விரிவாக்கம் கண்டுள்ளது, இயக்கத்தின் தேவைகளும் அதன் வேலைத் திட்டங்களும் அதிகரித்தள்ளன. எனவே போராளிகள் என்ற வரையறைக்குள் இல்லாதவர்களும் எமது இயக்கத்தின் வேலைத் திட்டங்களில் பங்கெடுத்து அதை மக்கள் மத்தியில் செயற்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எமது முழுநேர அங்கத்தவர்களானாலும் சரி, அல்லது இயக்கத்தின் வேலைத் திட்டங்களில் பணிபுரியும் மண்ணின் மைந்தர்களானாலும் சரி இவர்கள் அனைவரும் எமது இயக்கம் உருவாக்க விரும்பும் தூய்மையான சமூகத்தின் முன்னோடிகளாகவே இருந்து செயற்படவேண்டும். ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் இதைப் போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள். இதையும் மீறி ஈடுபடுபவர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இந்தவகையில் எமது முழுநேர உறுப்பினராக இருந்து செயற்பட்ட குரு மாஸ்ரர் (நடராசா சண்முகநாதன்) என்பவருக்கும் எமது உறுப்பினராகவோ அல்லது பகுதிநேர உறுப்பினராகவோ இல்லாதிருந்தும் எமது அமைப்பின் பெயரால் மக்களிடம் மோசடி செய்த வசந்தலோஜனாதேவி என்பவருக்கும் அவர்களின் சமுதாய விரோத குற்றச்செயல்களுக்காக மரண தண்டனையை விதித்துள்ளோம் என்பதை தமிழீழ மக்களுக்கு அறியத்தருகின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

# முல்லையில் வயிற்றுளைவு 3 சிறுவர் உட்பட ஐவர் பலி!

யாழ்ப்பாணம், செப் 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவும் புதுவகையான வயிற்றுளைவுநோயால் பெருமளவில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த இருவாரங்களில் மூன்று சிறுவர்கள் உட்பட ஐவர் இந்த நோய் காரணமாக இறந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அகதிகளாக வந்துள்ள திருமலை மக்களுக்கு போதிய சுகாதார வசதிகள் வழங்கப்படாததாலும், சனநெருக்கத்தாலும், குடிதண்ணீர் பிரச்சினையாலும் இந்த நோய் பரவுவதாகவும் சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான ஆய்வுகூடவசதிகள் இல்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அகதிகள் மூலம் உள்ளூர் மக்களுக்கும் தற்சமயம் இந்த நோய் தொற்றுவதாகவும், தடுப்புமருந்து போதிய அளவு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

நோயைத் தடுக்கத் தேவையான மருந்து வகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3-6]

## வேலணையில் ஷெல்

யாழ்ப்பாணம், செப். 16

அல்லைப்பிட்டி இராணுவ முகாமில் இருந்து வேலணை, சரவணைப் பகுதிகளை நோக்கித் தினமும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நேற்று சனிக்கிழமை ஏவப்பட்ட ஷெல்களில் சில வங்களாவடி முருகன்கோவில் வளவில் விழுந்து வெடித்தபோது சிறுசேதங்கள் ஏற்பட்டன. [இ - 15]

## 28 பீரங்கிப் படகுகள்

கொழும்பு, செப். 16

கடந்த வியாழக்கிழமை யாழ். கோட்டை முகாமைப் பிடிக்க அரசுப்படைகள் எடுத்த நடவடிக்கைக்கு உதவி புரிய 28 பீரங்கிப்படகுகள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ - எ)

## வயோதிப பெண்ணை காணவில்லை

யாழ்ப்பாணம், செப். 16

நவாலி சென். பீற்றர்ஸ் பாடசாலை அகதிமுகாமில் தங்கியிருந்த திருமதி. மர்சிலின் செல்வம் என்னும் வயோதிபப் பெண்ணைக் கடந்த 10 ஆம் திகதி முதல் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மனநோயாளியான இந்தப் பெண்ணை எவராவது கண்டால் முகாமுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ - 3)

## பதுங்குகுழியில் இடறி விழுந்த சிறுவன்

யாழ்ப்பாணம், செப். 16

ஹெலிக்கொப்டரைக் கண்டதும் பதுங்குகுழியை நோக்கி ஓடிய சிறுவன் பதுங்குகுழிக்குள் இடறி விழுந்தார். இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை வேலணையில் இடம்பெற்றது.

ஸ்ரீநாதன் சசிதர் (10வயது) என்ற இச்சிறுவன் கையில் முறிவு காயம் ஏற்பட்ட நிலையில் மானிப்பாயில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். [இ-15]

# அல்லைப்பிட்டி முகாமிலும் வயிற்றோட்டம்: பெண் பலி

## குழந்தைகளும்பெருமளவு பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 16

அல்லைப்பிட்டி பாடசாலையில் தங்கி உள்ள அகதிகள் மத்தியில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

இங்கு தங்கி இருந்த மண்டைதீவைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி என்பவர் வயிற்றோட்டம் காரணமாக மரணமானார்.

இந்த முகாமில் உள்ள குழந்தைகளும் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

றேணுகா லக்ஷ்மி காந்தன் (மண்டைதீவு) என்ற ஒரு வயதுக் குழந்தையும், கருணாநிதி அனிற்றா (ஊர்காவற்றுறை), என்ற மூன்று வயதுக் குழந்தையும் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டு மானிப்பாயில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளன. (இ-15)

## யாழ்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கட்டடங்களும்சேதமடைந்து காணப்படுகின்றன.

வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வந்த ஐந்து மாடிக் கட்டடமும் அந்தக்கட்டட வேலைகளை மேற்கொண்ட கட்டட நிறுவனத்தின் காரியாலயமும் சேதமடைந்துள்ளன.

கண்ணாடித் துண்டுகளும், இடிபட்ட கட்டடத் துண்டுகளும் ஆஸ்பத்திரி எங்கும் காணப்படுகின்றன. (இ-3-5)

## ஸ்ரீலங்கா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தன என்றும் சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இந்திய மீனவர்கள் இராமேஸ்வரம் மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்த மீனவர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் பத்தாயிரம் ரூபா முதலமைச்சர் நிதியில் இருந்து வழங்கப்படும் என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செல்லமுத்து அறிவித்தார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலிகள் அகோரதாக்குதல்

நேற்றுக்காலையில் இருந்து இரண்டு ஹெலிகள் யாழ்-குடாநாட்டின் பல பகுதிகளிலும் மூர்க்கத்தனமாக தாக்குதல்களை நடத்தின.

யாழ் நகரப்பகுதியில் அரியாலை, சுண்டுக்குளி, கச்சேரியடி, முத்திரைச்சந்தி, பஸ் நிலையம், கல்வியங்காடு பகுதிகளில் வட்டமிட்டு ஹெலிகள் தாக்குதல் நடத்தின.

முத்திரைச்சந்தி பகுதி வீதிகளில் கலிபர் தாக்குதலால் ஏற்பட்ட குழிகள் அடுத்தடுத்து காணப்பட்டன.

நகருக்கு வெளியே தாவடி, இணுவில், உரும்பராய், சுன்னாகம், தெல்லிப்பழைப் பகுதிகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

(இ-6-3 5)

# சுன்னாகம் தபாலகமும் திடீரென மூடப்பட்டது!

## விண்ணப்பதாரிகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 16

இயங்கிக்கொண்டிருந்த சுன்னாகம் தபாலகமும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் திடீரென மூடப்பட்டது.

தபால் திணைக்களத்தின் யாழ்-பிராந்திய தலைமைப் பீடத்தினால் விடுக்கப்பட்ட உத்தரவை அடுத்தே இந்தத் தபாலகம் மூடப்பட்டதாகத் தெரியவந்தது.

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருப்பதால் தபாலகத்தை திறக்க வேண்டாம் இன்று பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் அறிய வருகிறது.

சுன்னாகம் தபாலகம் வெள்ளியன்று திறக்கப்படாததால், அரச நியமனங்கள், மாகாண சபை நியமனங்கள் தொடர்பான போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற இருந்தவர்கள் 'மணி ஓடர்'களைப் பெற்று, விண்ணப்பிக்க முடியாமற் போய்விட்டதாகப் பலரும் கவலை தெரிவித்தனர்.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி நேற்று (சனி) ஆகும்.

யாழ்-பிரதம தபாலகம் மூடப்பட்டிருந்தபோது சப்பலில் கொண்டுவரப்பட்ட வட பகுதித் தபால்களைத் தரம் பிரிக்கும்வேலைகள்சுன்னாகம் தபாலகத்தில் வைத்தே நடைபெற்றன என்பதும்—

வெளியூருக்கான தபால் சேவைகளை சுன்னாகம் தபாலகம் ஊடாகவே மேற்கொள்வது என்று திட்டமிடப்பட்டிருந்ததும் தெரிந்தவையே.

(உ-ஒ)

# நேற்றைய கோட்டை மோதல்; போராளி ஒருவர் வீரமரணம்

கொழும்பு, செப். 16

யாழ். கோட்டைப் பகுதியில் நேற்று நடந்த உக்கிர சண்டையின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

படையினருடன் தீரமுடன் போராடி, உயிர்நீத்த அந்தப் போராளி கப்டன் கீரோராஜ் (சண்முகசுந்தரம் பிரபாகரன்-அச்செழு, நீர்வேலி.) ஆவார்.

போராளி கீரோராஜ் அவரது குடும்பத்தில் ஒரே மகனாவார். இவருக்கு இரு சகோதரிகள் உள்ளனர்.

கப்டன் கீரோராஜ் அவரது தந்தையாராலேயே இயக்கத்தில் சேர்க்கப்பட்டவர்.

புகழுடம்பு அச்செழுவில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது (ஒ)

## இரவு ஊரடங்கு

கொழும்பு, செப் 16

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றிரவு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிமுதல் நீக்கப்படுவதாக கூட்டுப் படைத் தலைமையகம்நேற்று அறிவித்தது. (ஒ-எ)

# மரண அறிவித்தல்

## நடராசா விசுவநாதன் [விசு]

யாழ்பாணம் அத்தியடி 40 புதுவீதியைச் சேர்ந்த நடராசா விசுவநாதன் (விசு) 14-09-90 அன்று அகால மரணமாகிவிட்டார். இவர் காலம்சென்ற நடராசா, திருமதி அல்லியம்மா அவர்களின் அன்புப் புதல்வனும், வடிவாம்பாள் (ஜேர்மனி), காலம்சென்ற பத்மநாதன் [தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் - வாழைச்சேனை], கணேசநாதன், தர்மாம்பாள், ஜெகதாம்பாள், தேவாம்பாள், கணநாதன் [சபா] ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகராஜா (ஜேர்மனி), காலம்சென்ற ஸ்ரீஞானரஞ்சிதம், நித்தியானந்ததேவி ஆகியோரின் மைத்துனரும், ஜெசிந்தன், சஜீவன், கௌசிகா, கல்பனா ஆகியோரின் மாமரும், கஜன், சோபிகா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார். இவரது மரணச்சடங்குகள் 14-09-90 அன்று மாலை அவரது சகோதரர் இல்லத்தில் [கொக்குவில்] நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்,

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்;
ந. கணநாதன்
[சபா]

[14209]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 4 இராணுவ அதிகாரிகள் உட்பட 26 பேர் பலி! 106 பேருக்குக் காயம்!!

கொழும்பு, செப். 16

கடந்த வியாழன் யாழ். கோட்டையை மீட்க எடுத்த முயற்சியில் 26 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

106 படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த படையினர் விவரம் வருமாறு:-

4 இராணுவ அதிகாரிகள்
ஒரு விமானப்படை அதிகாரி
19 சிப்பாய்கள்
2 கடற்படையினர்

— இப்படி அமைச்சு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

(ஒ-எ)

## பிரான்ஸிலுள்ள தமிழர் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 16

பிரான்ஸில் உள்ள தமிழர் தமது இனத்தவர்களுக்கு அங்குள்ள ''மெடிக்கல் சான்ஸ் பிரண்ட்' அமைப்பு மூலம் தபால்களை அனுப்புகிறார்கள்:

அங்கு அனுப்பப்படும் தபால்கள் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டு யாழ். செஞ்சிலுவைச் சங்கம்மூலம் உறவினர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

வட்டுக்கோட்டை, சங்கானைப் பகுதிகளைச் சேர்ந்த 150க்கு மேற்பட்ட உறவினர்களுக்கு இந்த வகையில் தபால்கள் கிடைத்துள்ளன.

[இ - 3]

# தலைமன்னார் பகுதியிலும் கடற்படை பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், செப், 16

தலைமன்னாரில்கடற்படையினர் குடியிருப்புப் பகுதிகள் மீது கடும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 15 வீடுகள் தரைமட்டமாகின. [ஒ]

# ரோந்து சென்ற படைமீது மட்டக்களப்பில் தாக்குதல்

மட்டக்களப்பு சின்னவத்தை என்ற இடத்தில் கடந்த வியாழனன்று ரோந்து சென்ற படையினர்மீது விடுதலைப்புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் சில படையினர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் தரப்பில் சைலன் (கோவில் போரதீவு) என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ)

# ● இப்படியும் ஒரு செய்தி

கொழும்பு, செப். 16

யாழ். கோட்டைப் பகுதியில் தொடர்ந்து நடந்து வரும் சண்டைகள் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக பலவித செய்திகள் வெளியாகின்றன.

அப்படி வெளிவரும் செய்திகள் சில நகைச்சுவை மிகுந்தவையாக உள்ளன.

இந்தச் செய்திகளை வெளியுலக தொலைத்தொடர்பு சாதனங்களும் அப்படியே ஒலி, ஒளி பரப்பி வருகின்றன.

அந்தவரிசையில் நேற்று வெளியானமற்றொரு செய்தி:-

''யாழ். நகரில் அரசுப் படைகள் 300 பேரை சந்தேகத்தின் பேரில்கைது செய்துள்ளனர்'' - இதுதான் அந்தச் செய்தி.

யாழ்ப்பாணத்தில் இராணுவம் வீடு, வீடாக தேடுதல் நடத்தி வருகிறது - இது நேற்று முன்தினம் வெளியான ஒரு செய்தி என்பது தெரிந்ததே. (ஒ)

# திருட்டு நகைகள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 16

சைக்கிளுடன் தங்க நகைகளையும் சேர்த்துத் திருடிச் சென்ற கள்வன் ஒருவனை விடுதலைப்புலிகள் தேடிப் பிடித்தனர்.

கரவெட்டி கோவிற் சந்தையில் பொருள்களை வாங்குவதற்காக அங்கு சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்தபோதே அது களவாடப்பட்டது.

கடந்தவியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது,

சைக்கிளில் நகைகள் அடங்கிய பை ஒன்றும் கொழுவப்பட்டிருந்தது, அந்தப் பையையும் சேர்த்தே கள்வன் எடுத்துச் சென்றிருந்தான்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் தீவிர விசாரணையில் ஈடுபட்டனர்.

கள்வன் தேடிப் பிடிக்கப்பட்டான். வீட்டில் புதைத்து வைக்கப்பட்டுருந்த நகைகள் தோண்டி எடுக்கப்பட்டன,

மீட்கப்பட்ட நகைகளில் 2 தாலிக்கொடிகள், 9 காப்புகள், 3 சங்கிலிகள் என்பன இருந்தன. [ஒ 5]

## நவராத்திரி

சாவகச்சேரி, செப். 16

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில்நவாரத்திரி விழாக்கள் இம்மாதம் 20 ஆம் திகதி வியாழனன்று ஆரம்பாகி 29 ஆம் திகதி விஜயதசமி, மானம்பு விழாவுடன் நிறைவு பெறும். அன்றைய தினம் கேதாரகௌரி விரதமும் ஆரம்பமாகும். (இ-31)

## ப.நோ.கூ.சங்கம் திறந்து சேவை

யாழ்ப்பாணம், செப். 16

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதிலும் திருநெல்வேலி,கொக்குவில் பகுதிகளில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் திறக்கப்பட்டு வழமையான சேவைகளை வழங்கின.

இடம்பெயர்ந்தோர் நிவாரணமும் வழங்கப்பட்டது (இ-6)

# மட்டு. - கல்முனை வீதியில் 7 ஸ்ரீலங்கா ராணுவ முகாம்கள்

மட்டக்களப்பு, செப். 16

26 மைல்கள் நீளமுடைய மட்டக்களப்பு - கல்முனை வீதியில் ஏழு ஸ்ரீலங்கா இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கல்லடி, ஆரையம்பதி, செட்டிபாளையம், ஒந்தாச்சிமடம், கல்லாறு, துறைநீலாவணை, கல்முனை ஆகிய இடங்களிலேயே இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரப்பகுதியிலும் பரவலாக முகாம்கள் உள்ளன.

முஸ்லிம் கிராமங்களில் ஊர்காவல்படையினர் முகாம்களை அமைத்துள்ளனர். இவர்கள் இராணுவத்தினரின் உதவியுடன், தமிழர்களின் கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி மக்களைக் கொலை செய்தும், துன்புறுத்தியும் வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெருமளவு தமிழர்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (ஒ)

# முல்லை. உணவுப்பொருள் பருத்தித்துறையில் தேக்கம்

யாழ்ப்பாணம், செப். 16

கொழும்பில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் அங்கு இறக்க முடியாத நிலையில் பருத்தித்துறையில் தேங்கிக் கிடக்கின்றன.

யாழ். மாவட்டத்துக்கான பொருள்கள் இறக்கப்பட்டு விட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான பொருள்கள் கப்பலில் இருந்து இறக்கப்படாமல் கப்பலிலேயே உள்ளன.

அந்தக் கப்பலை அங்கு கொண்டு செல்ல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. நேற்று வரை அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை என்று தெரியவந்தது. (இ-3 6)

## கண்நோய்

யாழ்ப்பாணம், செப். 16

மண்கும்பான் பள்ளிவாசல் முகாமில் தங்கி உள்ள அகதிகளுக்குக் கண்நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்கிறது. [இ - 15]

# உடைமையை நடைபாதையில் விற்ற குவைத் தமிழர்கள்

குவைத்தில் கடமை புரிந்த தமிழர் சம்பளம் கிடைக்காததால் தமது உடைமைகளை நடை பாதைகளில் போட்டு அரைவிலைக்கு விற்றுப் பணம் சேர்த்தார்களாம்.

குவைத்தை ஈராக் முற்றுகையிட்டுக் கைப்பற்றியதும், அங்குள்ள தொழில் அதிபர்கள் தமிழரின் பாஸ்போட்டைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டார்களாம்.

ஒவ்வொரு கம்பனியும் ஊழியர்களுக்கு சம்பளம் பாக்கியாக வழங்க வேண்டி இருந்தது. அவற்றை வழங்காது கம்பனி உரிமையாளர்கள் சென்றதால் ஊழியர்கள் பணம் இன்றி பட்டினி கிடக்கவும் ஏற்பட்டதாம், [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org